மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதியை ஆய்வு செய்து, வருகின்ற காலத்தில் அந்தப் பாலப் பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள். (குறுக்கீடு)*

வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

8—

அணைக்கட்டு

***18880—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, வீரகனூர் பேரூராட்சியிலுள்ள பொன்னாளியம்மன் அணைக்கட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, வீரகனூர் பேரூராட்சியில் உள்ள பொன்னாளியம்மன் கோயில் அருகே ஏரி அமைக்கும் திட்டம் உள்ளதா என்று இங்கே கேள்வி எழுப்பியுள்ளார்கள். இந்தத் திட்டம், இந்தத் துறையினுடைய ஆய்வில் உள்ளது. இத்திட்டத்தின்மூலம் அப்பகுதியிலே 441 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். துறையினுடைய விரிவான ஆய்வுக்குப்

2013 பிப்ரவரி 5]

பின்னர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்தத் திட்டத்தைச் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அணைக்கட்டு திட்டத்தை நிறைவேற்றினால் சுமார் 500 ஏக்கர் நிலங்கள் நேரடி நீர்ப்பாசனம் பெறும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றி. அந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்தினால் நன்றாக இருக்கும். 2013–2014 ஆம் ஆண்டிலே இந்தப் பணியினை எடுத்துக்கொண்டால் 1,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் நிலத்தடி நீர் உயரும். அதேபோல, வீரகனூர் பேரூராட்சி, தடாவூர் பேரூராட்சி மற்றும் 20–க்கும் மேற்பட்ட கிராமங்களின் குடிநீர்ப் பிரச்சினை தீரும். எனவே, இந்தத் திட்டத்தை 2013–2014ஆம் நிதியாண்டிலேயே எடுத்துக்கொண்டால் மிகவும் நன்றாக இருக்கும். எனவே, அதனைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக ரூ. 8.50 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு வேண்டிய நிலங்கள் தனியார்வசம் உள்ளதால், அந்தப் பட்டா நிலங்களுடைய உரிமையாளர்கள் அந்த நிலத்தைத் தருவதற்கு மறுக்கிறார்கள். எனவே, அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். விரைவிலே பேச்சுவார்த்தை முடிந்தவுடன், இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

[2013 பிப்ரவரி 5

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 56 ஏக்கர் நிலமும் தரிசு நிலமாக இருந்தது. அந்த 56 ஏக்கர் தரிசு நிலத்திலே, 16 ஏக்கர் நிலத்திற்கான பட்டா, தனிப்பட்ட நபர்களுக்கு வருவாய்த் துறையின்மூலம் வழங்கப்பட்டது. எனவே, அரசு அதைக் கையகப்படுத்தி, உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பேச்சுவார்த்தை முடிந்தவுடன், இந்தத் திட்டம் உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட கொண்டிகுளம் பகுதியிலேயிருந்து பட்டுக்கோட்டை நகருக்குக் குடிநீர் வந்து கொண்டிருக்கிறது. இதன் அருகில் இருக்கக்கூடிய காட்டாறான மகாராஜா சமுத்திரம் காட்டாற்றில், இந்தக் குடிநீருக்கான நீராதாரத்தைப் பெருக்கக்கூடிய வகையிலே சிறிய தடுப்பணை ஒன்று அமைத்தால், அந்தப் பகுதியிலே நீராதாரம் பெருகுவதற்கான வாய்ப்பிருக்கிறது. எனவே, மகாராஜா சமுத்திரம் காட்டாற்றில் ஆய்வு செய்து, ஒரு தடுப்பணை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தண்ணீரை வீணாக்கக்கூடாது என்ற அடிப்படையில், எங்கெங்கெல்லாம் தண்ணீர் வீணாகச் செல்கின்றதோ, அங்கெல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, தடுப்பணைகள் கட்ட வேண்டுமென்று உத்தரவிட்டதன் பேரிலே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, உரிய ஆய்வுக்குப்பின்*

2013 பிப்ரவரி 5]

எடுத்துக் கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

சுற்றுலா மையம்

***4605—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பண்ணாரி–பவானிசாகர் பகுதிகளைச் சுற்றுலா மையமாக மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடந்த 2011–2012ஆம் நிதியாண்டில், மத்திய அரசு நிதியுதவி பெறும் திட்டங்களின்கீழ், ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பண்ணாரி மற்றும் கீழ்பவானி அணைக்கட்டு பகுதி மேம்பாட்டிற்காகவும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவும், விரிவான திட்டம் தயார் செய்யப்பட்டு, ரூபாய் 5.50 கோடி நிதியுதவி வழங்க கொள்கை அளவிலே ஒப்புதல் அளித்து, உரிய கருத்துருவும் பெறப்பட்டு, மத்திய அரசு திட்டத்தின்கீழ் நிதி பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. விரைவிலே நிதி பெற்று, அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, பயணிகளின் வசதிக்காக அனைத்து மேம்பாட்டுப் பணிகளும் செயல்படுத்தப்படவுள்ளன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 2011–2012ஆம் நிதியாண்டில், மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ், சுற்றுலாச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு,